ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ருதி₃ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ பட்டி மேய்ந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பட்டி மேய்ந்து ॥

## விருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டமை

‡பட்டி மேய்ந்தோர் காரேறு⋆ பலதேவற்கோர் கீழ்க் கன்றாய்⋆
இட்டீறிட்டு விளையாடி⋆ இங்கே போதக் கண்டீரே⋆
இட்ட மான பசுக்களை⋆ இனிது மறித்து நீர் ஊட்டி⋆
விட்டுக் கொண்டு விளையாட⋆ விருந்தா வனத்தே கண்டோமே (1)

அனுங்க என்னைப் பிரிவு செய்து⋆ ஆயர் பாடி கவர்ந்துண்ணும்⋆
குணுங்கு நாறிக் குட்டேற்றைக்⋆ கோவர்த்தனனைக் கண்டீரே⋆
கணங்களோடு மின் மேகம்⋆ கலந்தாற் போல் வனமாலை⋆
மினுங்க நின்று விளையாட⋆ விருந்தா வனத்தே கண்டோமே (2)

மாலாய்ப் பிறந்த நம்பியை⋆ மாலே செய்யும் மணாளனை⋆
ஏலாப் பொய்கள் உரைப்பானை⋆ இங்கே போதக் கண்டீரே⋆
மேலால் பரந்த வெயில் காப்பான்⋆ வினதை சிறுவன் சிறகென்னும்⋆
மேலாப்பின் கீழ் வருவானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (3)

கார்த் தண் கமலக் கண் என்னும்⋆ நெடுங்கயிறு படுத்தி⋆ என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்⋆ ஈசன் தன்னைக் கண்டீரே⋆
போர்த்த முத்தின் குப்பாய⋆ புகர் மால் யானைக் கன்றே போல்⋆
வேர்த்து நின்று விளையாட⋆ விருந்தா வனத்தே கண்டோமே (4)

‡மாதவன் என் மணியினை⋆ வலையில் பிழைத்த பன்றி போல்⋆
ஏதும் ஒன்றும் கொளத் தாரா⋆ ஈசன் தன்னைக் கண்டீரே⋆
பீதக ஆடை உடை தாழப்⋆ பெருங்கார் மேகக் கன்றே போல்⋆
வீதி ஆர வருவானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (5)

தருமம் அறியாக் குறும்பனைத்⋆ தன் கைச் சார்ங்கம் அதுவே போல்⋆
புருவ வட்டம் அழகிய⋆ பொருத்தம் இலியைக் கண்டீரே⋆
உருவு கரிதாய் முகம் செய்தாய்⋆ உதயப் பருப்பதத்தின் மேல்⋆
விரியும் கதிரே போல் வானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (6)

www.prapatti.com

பொருத்தம் உடைய நம்பியைப்⋆
புறம் போல் உள்ளும் கரியானை⋆
கருத்தைப் பிழைத்து நின்ற⋆
அக்கரு மா முகிலைக் கண்டீரே⋆
அருத்தித் தாரா கணங்களால்⋆
ஆரப் பெருகு வானம் போல்⋆
விருத்தம் பெரிதாய் வருவானை⋆
விருந்தா வனத்தே கண்டோமே (7)

வெளிய சங்கொன்றுடையானைப்⋆
பீதக ஆடை உடையானை⋆
அளி நன்குடைய திருமாலை⋆
ஆழியானைக் கண்டீரே⋆
களி வண்டெங்கும் கலந்தாற் போல்⋆
கமழ் பூங்குழல்கள் தடந் தோள் மேல்⋆
மிளிர நின்று விளையாட⋆
விருந்தா வனத்தே கண்டோமே (8)

‡நாட்டைப் படை என்றயன் முதலாத் தந்த⋆ நளிர் மா மலர் உந்தி⋆
வீட்டைப் பண்ணி விளையாடும்⋆ விமலன் தன்னைக் கண்டீரே⋆
காட்டை நாடித் தேனுகனும்⋆ களிறும் புள்ளும் உடன் மடிய⋆
வேட்டை ஆடி வருவானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (9)

‡பருந் தாள் களிற்றுக்கருள் செய்த⋆
பரமன் தன்னை⋆ பாரின் மேல்
விருந்தா வனத்தே கண்டமை⋆
விட்டுசித்தன் கோதை சொல்⋆
மருந்தாம் என்று தம் மனத்தே⋆
வைத்துக் கொண்டு வாழ்வார்கள்⋆
பெருந் தாள் உடைய பிரான் அடிக்கீழ்⋆
பிரியாதென்றும் இருப்பாரே (10)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com